www.Padasalai.Net www.CBSEtips.in

TAcc

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி

கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 50

பகுதி - I

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. **10×1=10**

1) ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) பேரேடு

2) நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

3) வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் காலக் கருத்து ஈ) முன்னெச்சரிக்கை மரபு

4) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மையவங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

5) ஒரு நிறுவனத்தின் சொத்து மதிப்பு ₹ 1,00,000 அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹ 60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ................
அ) ₹ 1,60,000 ஆ) ₹ 60,000 இ) ₹ 1,00,000 ஈ) ₹ 40,000

6) முன்கூட்டி செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு க/கு ஆ) ரொக்க க/கு
இ) சொத்து க/கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு

7) உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
அ) எடுப்புகள் க/கு ஆ) ரொக்க க/கு இ) முதல் க/கு ஈ) கொள்முதல் க/கு

8) கு.ப.எ. என்பது
அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
இ) சான்றுசீட்டு எண் ஈ) ஆணை எண்

9) ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

10) உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
அ) ரொக்க க/கு ஆ) எடுப்பு க/கு இ) முதல் க/கு ஈ) அனாமத்து க/கு

பகுதி - II

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 17க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **5×2=10**

11) கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.

12) கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

13) ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?

14) பெயரளவு கணக்கிற்கான கணக்கியல் விதியைக் கூறுக.

15) எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

16) குறிப்பேட்டுப் பதிவு தந்து ரொக்க கணக்கில் எடுத்தெழுதுக.

2016

| | | |
|---|---|---|
| ஜூன் | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 1,10,000 |
| | 10 | கூடுதல் முதல் இட்டது ₹ 50,000 |
| | 28 | சொந்த செலவுக்கு ரொக்கம் எடுத்துக் கொண்டது ₹ 20,000 |

17) குறிப்பேட்டின் படிவம் தருக.

பகுதி - III

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 24க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **5×3=15**

18) கணக்கேடுகள் பராமரிப்பிற்கும் கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகள் ஏதேனும் மூன்றினைத் தருக.

19) ''பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்'' - விவரி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


20) இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

21) ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.

22) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
₹ 1,00,000 = ₹ 80,000 + ?

ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
₹ 2,00,000 = ? + ₹ 40,000

இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
? = ₹ 1,60,000 + ₹ 80,000

23) 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
சொத்துகள் : ரொக்கம் ₹ 40,000; சரக்கிருப்பு ₹ 50,000; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹ 20,000; இயந்திரம் ₹ 40,000.
தொடக்கப் பதிவினைத் தருக.

24) குறிப்பு வரைக: (அ) சான்றுச்சீட்டு (ஆ) இரட்டைத் தன்மைக் கருத்து

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்!** **3×5=15**

25) அ) கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக விவரி.

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை பாரி என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக.

| 2022 | | |
|---|---|---|
| அக். | 1 | தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது ₹ 25,000 |
| | 7 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது ₹ 12,500 |
| | 14 | அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது ₹ 2,000 |
| | 21 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 5,000 |
| | 28 | ஓரி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 4,000 |

26) அ) பின்வரும் விவரங்களிலிருந்து படேல் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2022 | | | ₹ |
|---|---|---|---|
| மார்ச் | 1 | படேல் கணக்கின் வரவு இருப்பு | 40,000 |
| | 15 | படேலுக்கு ரொக்கம் செலுத்தியது | 20,000 |
| | 20 | படேலிடமிருந்து கடனாக கொள்முதல் செய்தது | 80,000 |
| | 25 | படேலுக்கு ரொக்கம் செலுத்தியது | 39,600 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 400 |
| | 31 | படேலிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 50,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் முருகன் அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2020 | | | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | முருகன் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| | 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| | 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| | 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| | 18 | வாடகை செலுத்தியது | 500 |
| | 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| | 28 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

27) அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

i) முருகன் ₹ 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.
ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000
iii) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000
iv) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பண வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹ 5,000
v) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com